*வினா எண். 1035—திரு. வெ. அரங்கராசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் மேலாளர், ஊராட்சி வளர்ச்சி அலுவலர், கல்வி வளர்ச்சி அலுவலர் ஆகியவர்களுக்கு ஒரே பணி விதி கொண்டு வரப்பட்டு ஒரு சில மாவட்டங்களில் மட்டும் செயலாக்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் மற்ற மாவட்டங்களுக்கும் செயல்படுத்த அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு—(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய மேலாளர்கள் ஊராட்சி வளர்ச்சி அலுவலர்கள், கல்வி வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோரிடையே பணிமாற்றங்கள் செய்யலாம் என்பது பற்றிய அரசாணை சேலம், தஞ்சாவூர், தர்மபுரி போன்ற ஒரு சில மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இதற்கிடையில் இப்பிரச்சினை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதனால் மேற்படி அரசாணையை தொடர்ந்து செயல்படுத்துவதா, அல்லது அதை ரத்து செய்யவோ வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. நீதிமன்ற முடிவுக்குப் பின்னர் இதுபற்றி அடுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோரணம்: தலைவரவர்களே, இந்த ஆணையை செயல்படுத்துவது தடைபட்டு, கோர்ட்டிலே இருப்பதாகச் சொன்னார்கள். சீக்கிரமாக அதை முடிவுக்குக் கொண்டுவர அரசு முயற்சி எடுத்திருக்கிறதா? அதில் எந்த அளவுக்கு பலன் ஏற்பட்டிருக்கிறது? இல்லை என்றால் சீக்கிரம் முடிவுக்குக் கொண்டுவந்து, இந்த ஆணை அமுல் நடத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, சீக்கிரமாக நடத்த வேண்டுமென்றுதான் பல்வேறு கட்டங்களில் பேச்சு வார்த்தைகள் எல்லாம் நடத்தப்பட்டன. இதைப் பொறுத்த வரையில் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தாலும் நீதிமன்றத்தின் முடிவு இன்னும் கிட்டாத காரணத்தாலும் தடை ஏற்பட்டிருக்கிறது; முடிவு கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

குரோம்பேட்டையிலுள்ள அரசு மருத்துவமனை

*வினா எண். 1036—திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குரோம்பேட்டையில் உள்ள அரசினர் மருத்துவமனையில் போதிய அறுவை சிகிச்சை அரங்கு இல்லாத காரணத்தால் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

1981 மே 14]

(ஆ) ஆம் எனில் அம்மருத்துவமனையில் போதிய அளவிற்கு அறுவை சிகிச்சை அரங்கு ஏற்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) நோயாளிகள் பாதிக்கப்பட்டதாக அரசுக்கு தகவல் ஏதும் இல்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரி.

*வினா எண் 1037—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரியில் இவ்வாண்டு (1980) எத்தனை பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்?

(ஆ) வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் எத்தனைப் பேர்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக்கல்லூரியில் இவ்வாண்டு (1980–81) பி.எஸ்.எம்.எஸ். பட்டப்படிப்புக்கு 75 பேர்களும், எம்.டி. சித்தா பட்ட மேற்படிப்புக்கு 13 பேர்களும், இந்தியமுறை மருந்தாளுநர்கள் பட்டப்படிப்பிற்காக 8 பேர்களும், ஆக மொத்தம் 96 பேர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

(ஆ) கேரள மாநிலத்தைச் சேர்ந்த 2 மாணவர்கள் பி.எஸ்.எம்.எஸ். சித்தா பட்டப்படிப்பிலும் பாண்டிச்சேரியைச் சேர்ந்த ஒரு மாணவர் எம்.டி. (சித்தா) படிப்பிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(முற்பகல் 9–20)

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே பாளையங்கோட்டையிலே உள்ள இந்திய மருத்துவக்கல்லூரியில் 306 பேர் சேர்க்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்களிலே தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, பட்டப்படிப்புக்கு 75 பேர்களும் மேற்பட்டப்படிப்பிற்காக 13 பேர்களும் சேர்க்கப்பட்டிருப்பதாக நான் பதில் கொடுத்திருக்கிறேன். 75 பேரிலே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் எண்ணிக்கை 14. அங்கே அவர்களுக்கு என்று 18 சதவீத